அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 22/94

எனது இல. 111/0266/2/68(பொது)எல்/எச்ஜ-94
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு.07.
1994,யூன் மாதம் 16 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தைப் பெற்றுக் கொள்ளல் அல்லது வீடொன்றை அமைத்தல்/ பூர்த்தி செய்தல் என்பவற்றுக்கான கடன்கள் - தாபன விதிக்கோவை அத்தியாயம்- xxIv

---

1991.11.20 ஆந் திகதிய 54/91 ஆம் இலக்க, 1992.01.14 ஆந் திகதிய 54/91(1) ஆம் இலக்க, 1992.01.30ஆந் திகதிய 6/92 ஆம் இலக்க, 1992.11.11 ஆந் திகதிய 32/92 ஆம் இலக்க,1994.04.26 ஆந் திகதிய 15/94ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கும் தாபனக் கோவையின் xxIv ஆம் அத்தியாயத்தின் 11ஆம் பிரிவுக்கும் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேலே முதலாம் பந்தியின்படி பெறக் கூடிய கடன்கள் மேற்படி சுற்றறிக்கைகளுக்கும்,தாபனக் கோவையின் xxIv ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக,ஒரு வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி மூலமாக அத்தகைய ஒரு நோக்கத்துக்காகப் பெறப்பட்ட கடனை மீளச் செலுத்தக் கூடியதாகவும் நீடிக்கப்படுகிறது.

3. அத்தகைய ஒரு நோக்கத்துக்காக இற்றைவரைக்கும் ஐந்து (05) ஆண்டுச் சம்பளக் கடனைப் பெறாத உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இச்சலுகையை வழங்கப்படுகிறது. இத் தொடர்பில் 6/92ஆம் இலக்க அ.நி. சுற்றறிக்கையின் 11.15.5 ஆம் பந்தியின் (இ) மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. 15/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலமாக வழங்கப்பட்ட சலுகையின்படி ஐந்து(05) ஆண்டுக் கடனை ஒரே முறையிலோ இரு முறைகளிலோ பெற்ற எந்த ஓர் உத்தியோகத்தரும்,அல்லது அ.நி. சுற்றறிக்கை 54/91 மற்றும் 06/92 இன் கீழ் ஐந்து (05) ஆண்டுக் கடனைப் பெற்றுள்ள எந்த ஓர் உத்தியோகத்தரும் அத்தகைய கடனை முழுமையாகச் செலுத்தியிருப்பினும் மீண்டும் பெற முடியாது..

4. இச் சுற்றறிக்கை வெளியிடும்போது பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கடன் தொடர்பில் மட்டும் இச் சலுகை வலுவுடையதாகும். கடனாளி கடனைப் பெறுவதற்காகப் பிணை வைக்கப்பட்ட சொத்துக்களின் தனி உரித்தாளியாக இருப்பது இன்றியமையாததாகும்.

..2

05. (அ) எவரேனும் ஒருவர் மேற்குறித்த நோக்கங்களுக்காக ஒரு வங்கி மூலம் கடன் பெற்றிருப்பாராயின் முழுமையாகச் செலுத்தி முடிப்பதற்காக வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை அவ்வுத்தியோகத்தரின் 05 ஆண்டுச் சம்பளத்துக்குச் சமமாகவோ அல்லது அதைவிடக் குறைந்ததாகவோ இருப்பின் இத்தகைய கடனை பெற முடியும்.

(ஆ) அதேபோல் எவரேனும் ஒருவர் ஒரு வங்கி மூலம் பெற்றுக் கொண்ட மேற்படி கடனை முழுமையாகச் செலுத்தி முடிப்பதற்குத் தேவையான மொத்தத் தொகை அவ்வுத்தியோகத்தரின் ஐந்து (05) ஆண்டுச் சம்பளத்துக்கு மேற்படின், அத் தொகைக்கும் அவருடைய ஐந்து(05) ஆண்டுச் சம்பளத்துக்கும் இடையிலான பணத்தொகை கடனாளியால் வங்கிக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

(இ) எவரேனும் ஒருவர் அத்தகைய நோக்கத்துக்காக ஒரு வங்கி மூலம் பெற்றுக் கொண்ட கடனில் ஒரு பகுதியைத் தற்போது கொடுத்திருப்பின் அக்கடன் தொகையில் கொடுபடாத மிகுதித் தொகைக்குச் சமமான தொகையை மட்டும் அவர் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு கொடுக்கப்படாத முழுத்தொகை உத்தியோகத்தரின் ஐந்து (05) ஆண்டு சம்பளத்திற்கு மேற்படுமிடத்து கடனைப் பெறுவதற்காக மேல் (ஆ) வில் குறிப்பிட்டுள்ளவாறு நடந்து கொள்ள வேண்டும்.

06. ஒரு அரச உத்தியோகத்தர் தனிப்பட்ட பிணையாளிகளை வைத்து ஒரு வங்கி மூலமாக மேற்படி நோக்கத்துக்காகக் கடன் பெற்றுக் கொண்டிருப்பாராயின் அத்தகைய கடனைக் கொடுப்பதற்காக இச்சலுகை வழங்கப்படமாட்டாது.

07. மேற்குறிப்பிட்ட கடனைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இற்றைவரை வெளியிடப்பட்டுள்ளவையும், முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவையுமான சுற்றறிக்கைகளிலும், தாபனக் கோவையிலும் அடங்கியுள்ள இது தொடர்பான விடயங்கள் இச்சலுகை வழங்குவது தொடர்பிலும் ஏற்புடையனவாகும்.

08. கடனைக்கோரும்போது கடன் கோருபவரால் இத்துடன் இணைத்துள்ள படிவம் (கடன்/பி 01) பூர்த்தி செய்யப்பட்டுச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு/திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09 (அ) கடன் பெறுபவர், கடனைப் பெற்றுக் கொண்ட வங்கியிலிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி அமைந்த (வங்கி /பி01) ஒரு பிரகடனத்தை பெற்ற பின்பு கடன் அனுமதிக்கப்பட வேண்டும். கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான பற்றுச்சீட்டைக் கடனாளியிடமிருந்து பெற்ற பின்பு அனுமதிக்கப்பட்ட கடன் தொகைக்கான காசோலை கடனாளியின் கடன் தொகையின் பேரில் செலுத்தக் கூடியதான வங்கியின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

(ஆ) (வங்கி /பீ01)படிவத்தின் 12இல் குறிப்பிட்டுள்ள எழுத்தாவணங்கள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்தில் பெற்றுக் கொள்வதில் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

10. இச்சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை.பீ.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தை பெற்றுக் கொள்ளல் அல்லது வீடொன்றை அமைத்தல்/வீடொன்றின் வேலை பூர்த்தி செய்தல் என்பவற்றுக்காக ஒரு வர்த்தக வங்கி/தேசிய சேமிப்பு வங்கி மூலமாகப் பெற்றுக் கொண்ட கடனைக் கொடுத்து முடிப்பதற்காக அரசாங்கம் கடன் வழங்கும் கடனாளியின் பிரகடனம்.

---

01. உத்தியோகத்தரின் பெயர் :-
02. அமைச்சு/திணைக்களம் :-
03. பதவி (வகுப்பு - தரம் ஆகியவற்றுடன்) :-
04. முதல் நியமனத் திகதி :-
05. பிறந்த திகதியும் தற்போது வயதும் :-
06. தற்போது பெறுகின்ற திரட்டிய ஆண்டுச் சம்பளம் (படிகளை விட) :-
07. ஒரு வங்கி மூலம் கடன் பெற்றிருப்பின் -
   (1) கடன் வழங்கிய வங்கியின் பெயர் :-
   (11) கடனாளியின் பெயர் :-
   (111) கடன் பெறப்பட்ட திகதி :-
   (1v) கடன் பெறப்பட்டது எதற்காக :-
   (v) அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகை :-
   (v1) கடன் அனுமதிக்கப்பட்ட திகதி :-
   (v11) தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் தொகை :-
   (v111) கடன் முழுமையாகக் கொடுத்து முடிக்க வேண்டிய
   வருடம் :- மாதம் :- திகதி :-
   (1x) கடனுக்கு வங்கி அறவிடும் வட்டி வீதம் :-
   (x) இப்போதைக்கு அத்தொகையில் வங்கியில் கொடுக்கப்பட்ட முழுத்தொகை :-
08. கடன் பெறுவதற்காக வங்கியில் ஈடுவைக்கப்பட்ட காணியின்/சொத்தின் விபரங்கள் -
   (அ) உறுதி இல :-
   (ஆ) உறுதியின் பதிவு இலக்கம் :-
   (இ) பதிவு செய்யப்பட்ட திகதி :-
   (ஈ) பதிவு செய்யப்பட்ட மாவட்ட அலுவலகம் :-
   (உ) உறுதியைச் சிபார்சு செய்த நொத்தாரிசின் சட்டத்தரணியின் பெயரும், மாவட்டமும் :-
09. (அ) ஈட்டு முறியின் பதிவு இலக்கம் :-
   (ஆ) அதன் பதிவுத் திகதி :-
   (இ) அது பதிவு செய்யப்பட்ட மாவட்ட அலுவலகம் :-
   (ஈ) நொத்தாரிசின்/சட்டத்தரணியின் பெயரும், மாவட்டமும் :-

..6

10. கடன் பெறப்பட்டது வீடொன்றை அமைப்பதற்கு/வீடொன்றைப் பூர்த்தி செய்வதற்காக இருப்பின் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி:-

11. தற்போது பெற்றுக் கொண்ட கடன் தொகையைப் பயன்படுத்தி அவ்வீட்டின் எவ்வளவு பகுதி முடிக்கப்பட்டுள்ளது:-

( 06/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 11:22 ஆம் பந்தியின் நியதிகளின்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் அறிக்கை இணைக்கப்பட வேண்டும். )

மேற் குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதி கூறுகின்றேன்.

---------------------

கடன் பெறுபவரின் கையொப்பம்

திகதி:-

• கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தைப் பெற்றுக் கொள்ளல், வீடொன்றை அமைத்தல்/வீடொன்றின் வேலை பூர்த்தி செய்தல் என்பவற்றுக்காக ஒரு அரச உத்தியோகத்தர் வங்கியின் மூலம் பெற்றுக் கொண்ட கடனை அவர் சார்பில் அரச நிறுவன மொன்றால் வங்கிக்குக் கொடுத்து முடிக்கும் போதான வங்கிப் பிரகடனம்.

---

01. (அ) வங்கியின் பெயர் :-
(ஆ) வங்கிக் கிளையின் பெயர் :-
(இ) இலக்கம் :-

02. கடனாளியின் முழுப்பெயர் :-

03. முகவரி :-
(அ) நிரப்பப்பட்ட :-
(ஆ) உத்தியோகபூர்வ :-

04. கடன் வழங்கப்பட்டது எதற்காக :-

05. (அ) அனுமதிக்கப்பட்ட கடன் தொகை :-
(ஆ) அது அனுமதிக்கப்பட்ட திகதி :-

06. இன்று வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தத் தொகை :-

07. கடனுக்காக அறவிடப்படும் வட்டி வீதம் :-

08. கடன் கொடுத்து முடிக்க வேண்டிய திகதி :-
வருடம் - மாதம் - திகதி குறிப்பிடுக.

09. 19 .......... மாதம் ....... ஆந் திகதியில் கடனை முழுமையாகக் கொடுத்து முடிப்பதற்காகக் கடனாளி வங்கிக்குக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை :- (வட்டிகளுடன்) :-

(கடனாளி அரசாங்கக் கடனைப் பெற்றுக் அதைக் கொண்டு வங்கிக் கடனைக் கொடுத்து முடிப்பதற்காக எடுக்கும் காலத்தைப் பற்றிக் கடனாளி சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின் மேல் 09ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள திகதியையும் மொத்தத் தொகையையும் குறிப்பிட வேண்டும்.)

(கடனாளி கொடுக்க வேண்டிய மொத்தத் தொகையை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிட வேண்டும்.)

10. கடன் பெறுவதற்காகக் கடனாளி வங்கிக்கு ஈடு செய்த சொத்தின்/காணியின்
(அ) உறுதி இலக்கம் :-
(ஆ) உறுதியின் பதிவு இலக்கம் :-
(இ) உறுதி பதிவு செய்யப்பட்ட திகதி :-
(ஈ) உறுதி பதிவு செய்யப்பட்ட காணிப் பதிவு அலுவலகம் :-
(உ) உறுதியை சிபாரிசு செய்த நொத்தாரிசின்/சட்டத்தரணியின் பெயர் :-

11. (அ) காணி ஈட்டு முறியின் இல:-
(ஆ) காணி ஈட்டு முறியின் பதிவு இலக்கம்:-
(இ) காணி ஈட்டு முறி பதிவு செய்யப்பட்ட திகதி:-
(ஈ) மாவட்டம்:-

12. மேல் 9ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகையை ........................அமைச்சின் செயலாளர்/.......... ..........திணைக்களத் தலைவர் கடனாளிக்காக இந்த வங்கிக்கு செலுத்திய திகதி முதல் 7 நாட்களில் பின்வரும் எழுத்தாவணங்களை அத்தகைய அமைச்சின் செயலாளரிடம்/திணைக்களத்தின் தலைவரிடம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க உடன்படுகிறேன்.

(அ) மேல் 10 ஆ இலக்கத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து/காணி உறுதியின் மூலப் பிரதி.

(ஆ) மேல் 11 இலக்கத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து/காணி தொடர்பில் எழுதப்பட்ட ஈட்டு முறி தகுந்த முறையில் மீளப்பட்டு அவ்வாறு விடுவிக்கப்பட்ட உறுதியின் மூலப்பிரதி.

(இ) உரிய ஏனைய எழுத்தாவணங்களின் மூலப் பிரதிகள்.

---------------------------

வங்கி முகாமையாளரின் ஒப்பம்

வங்கி முகாமையாளரின் பெயர்:-

திகதி:-